ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# திருமந்திரத்தில் திருவைந்தெழுத்து மந்திரம்

*முனைவர் சி. உமா சாரதா*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.*
*சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 05*

*ஆய்வுச் சுருக்கம் :*

*மனித உயிரகள் தன்னிகரில்லா உயர்நிலை அடைய சுய ஒழுக்கம் அவசியமாகிறது. தனிமனித ஒழுக்கமே ஒருவனை நன்னிலைக்கு அழைத்துச் செல்லும். நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கும் இக்கலியுகத்தில் மனித உயிர்கள் உய்வுப்பெற பக்தி நெறி தேவை. அவ்வழியில் சமயம் சார்ந்தோ அல்லது பிரபஞ்ச விதியின் அடிப்படையிலோ நாமக்கீர்த்தனை (செபம்) செய்வது கடைபிடிக்க வேண்டிய ஞானமார்க்கம் ஆகும். அதற்கான செய்திகளை அறிந்து உணர்ந்துக் கொள்ள வேண்டி திருமந்திரத்தில் திருவைந்தெழுத்து மந்திரம் என்னும் இவ் ஆய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையில் மந்திரம் என்பதற்கான விளக்கமும் அதன் மகிமையும் குறித்து விளக்கப்பட்டுள்ளது. திருவைந்தெழுத்து மந்திரத்தின் மகிமையும் வகைகளும் திருமந்திரம் மற்றும் சில சைவ நூல்கள் கொண்டும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. பிரணவ மந்திரத்துடன் கூடிய திருவைந்தெழுத்து மந்திரத்தின் பொருள் விளக்கப்பட்டுள்ளது. திருவைந்தெழுத்து மந்திரத்தின் தமிழியல் விளக்கம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருவைந்தெழுத்து மந்திரத்தின் பலன்களும் சமயப் பெரியோர்களின் வாக்கும் விவரிக்கப்பட்டுள்ளது. சிவன் திருப்பெயர் காரணமும் ஐந்தெழுத்தால் ஆனவன் சிவன் என்பதும் நிறுவப்பட்டுள்ளது. பிரணவத்திலும் ஐந்தெழுத்து வியாபித்துள்ளமையும் திருவைந்தெழுத்தின் சர்வ வல்லமைக் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.*

*முன்னுரை :*

*பன்னிரு திருமுறைகளில் "பெருமந்திரமாம் திருமந்திரம்" ஞானநெறி காட்டும் ஞானப்பனுவல் ஆகும். ஜீவஆத்மாக்கள் பரமாத்மாவிடம் சரணடையும் மார்க்கம் திருமந்திரத்தில் வெகுவாக பரவிக்கிடக்கிறது. இறைவனை எளிதில் அடைய அன்பு மட்டுமே போதும் என்ற போதிலும் ஆகமங்கள் பல பின்பற்றப்படுகின்றது. அவ்வழியில் பூசா விதிகள் பின்பற்றப்பட்டாலும் கலிகாலத்தில் நாமக்கீர்த்தனை மட்டுமே உய்விக்கும் பெ(பே)று வழியாகும். நாம் ஆழ்மனதில் இறை நாமத்தை தொடர்ந்து செபித்து கொண்டே இருந்தோமேயானால் தீயன விலகி நன்மை பிறக்கும் என்பது சத்திய வாக்கு. நம் மனதில் தொடர்ந்து மந்திரம் ஒலித்துக் கொண்டே இருக்குமானால் மனக்கசடுகளையும் மாயையையும் தவிர்த்து மெய்ஞானம்உணரத் தலைப்படுவோம். அவ்வாறு ஓதும் நாமத்தை மந்திரமாக வார்த்து தந்துள்ளனர் நம் பக்திப் பெரியோர்கள். திருமந்திரத்தில் திருவைந்தெழுத்து மந்திரம் பற்றியும் அதன் மகத்துவம் பற்றியும் இவ்ஆய்வுக் கட்டுரையில் ஈண்டுக் காண்போம்.*

*மந்திரம் :*

*மந்திரம் என்றால் நினைப்பவனைக் காப்பது என்பது பொருள். மனதை ஸ்திரமாக்க உச்சரிக்கப்படுவது மந்திரம். மனிதன் தன் மனதினை ஸ்திரமாக வைத்துக் கொண்டால் உடலுறுதிக்கு அது வித்திடும். உடல் மற்றும் மனம் உறுதியாக இருந்தால் ஆன்ம பலம் கிட்டுவது நிச்சயம். உடல் பலம்இ மன பலம் மற்றும் ஆன்ம பலம் இவை யாவும் தனிமனித உயர்வுக்கு*

*நிச்சயம் அடிகோலும். நாம் தொடர்ந்து மந்திரம் உச்சரிக்கத் தொடங்கினால் உள்ளாற்றல் பெருகிப் பேரொளித் தோன்றுவது எளிதில் கைகூடும். பக்திமார்கத்தில் சென்று மந்திர உச்சாடனைச் செய்து மெய்ஞான அறிவைப் பெற திருவைந்தெழுத்தின் மகத்துவம் அறிவது அவசியமாகும்.*

*திருவைந்தெழுத்து மந்திரமும் வகைகளும் :*

*திருமந்திரம் பஞ்சாட்சரத்தை விளக்கி அதன் பயனைக் கூறுகிறது. பஞ்சாட்சரம் என்பது ஐந்தெழுத்தால் (பஞ்ச – அட்சரம்) ஆகிய மந்திரம் ஆகும். சிவபெருமானுடைய பெயர் மந்திரமாக அமைந்து இருக்கிறது. இதனை பஞ்சாட்சரம் எனவும் திருவைந்தெழுத்து மந்திரம் எனவும் வழங்குவர். சிவாய நம என்பதே ஐந்தெழுத்து மந்திரம் ஆகும். சிவாய நம என்றால் சிவபெருமானே உன்னை வணங்குகிறேன் என்று பொருள் ஆகும். இம்மந்திரத்தை அன்போடு செபித்தால் அனைத்து நன்மைகளும் ஏற்படும். பஞ்சாட்சரம் என்பது தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம், ஆதி பஞ்சாட்சரம் என வழங்கப்படும்.*

*தூல பஞ்சாட்சரம் என்பது வெளிப்படையாகத் தொழுவது ஆகும். இதுவே மூல மந்திரம் ஆகும். சூக்கும பஞ்சாட்சரம என்பது புலப்படாதது, உணரக் கூடியதாகும். ஆதி பஞ்சாட்சரம் என்பது ஞானிகளால் மட்டும் உணரமுடிவது என திருமூலர் திருமந்திரத்தில் விளக்குகிறார். தூல பஞ்சாட்சரம் அல்லது தூல ஐந்தெழுத்து என்பது சிவாய நம என்பதாகும். இதனை,*

*"ஆலய மாக அமர்ந்தபஞ் சாக்கரம்*
*ஆலய மாக அமர்ந்தவித் தூலம்போய்*
*ஆலய மாக வருகின்ற சூக்குமம்*
*ஆலய மாக அமர்ந்துஇருந் தானே"　　　　(திரும - 919)*

*இப்பாடலில் உள்ளபடி திருவம்பலச்சக்கரத்தில் இருக்கும் பஞ்சாட்சர மந்திரத்தையே கோயிலாகக் கொண்டு இறைவன் அமர்ந்தப்பிறகு சாதகர்கள் சக்கரத்தில் வரிவடிவமாக இருக்கும் சிவயநம மந்திர எழுத்துக்களில் வீற்றிருக்கும் இறைவன் மேல் எண்ணத்தை வைத்து செபித்தால் தமது உடலே கோயிலாகக் கொண்டு இறைவன் தமக்குள்ளும் வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்துக் கொள்வார்கள் என்கிறது திருமந்திரம்.*

*மேலும் இம்மந்திரம் சிவயோகம் சித்திக்கும் மந்திரம் ஆகும். நம சிவாய என்ற மந்திரம் சிவபெருமானின் நாமமாக விளங்குகிறது என்பதை திருமந்திரம் பின்வரும் பாடலில் கூறுகிறது.*

*"அகார முதலாக ஐம்பத்து ஒன்றாகி*
*உகார முதலாக ஓங்கி உதித்து*
*மகார இறுதியாய் மாய்ந்து மாய்ந்தேறி*
*நகார முதலாகும் நந்திதன் நாமமே"　　　　(திரும – 2699)*

*அதாவது அகரம் முதல் 51 எழுத்துக்கள், அ உ ம் சேர்ந்து 'ஓம்' நந்தியைக் குறிக்கும். நந்திதேவர் நந்தியம் பெருமானைக் கொண்டவர் ஆவார். நம சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம் நாதன் நாமமே என்பதை தேவாரத்தில்,*

*"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி*
*ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது*
*வேத நான்கினும் மெய்பொரு ளாவது*
*நாதன் நாமம் நமசி வாயவே"　　　　(பதிகம் 3 - பா.01)*

*என திருஞானசம்பந்தரின் வாக்காலும் அறியலாம். இறைவனின் நிலையினை சிவம் என்னும் பெயரால் குறிப்பிடுவர். சூட்சும வாக்காகிய நாதத்திற்க்கு பற்றுக்கோடாக இருத்தல் பற்றி இந்தத் தத்துவத்திற்க்கு நாதம் என்னும் பெயரும் உண்டு. எனவே சிவ தத்துவத்தினை நாத தத்துவம் என்று குறிப்பிட்டு வழங்கும் மரபும் உண்டு என்பது இப்பதிகம் மூலம் அறியமுடிகிறது.*

*சிவன் திருப்பெயர் :*

*சிவப்பெருமானின் திருப்பெயரை அன்புடன் கூறுபவர்களுக்குத் திருவருள் துணை முன்னிற்பதால் செய்வதற்க்கு அரிய செயல் எதுவும் இல்லை. பிறப்பும் இறப்பும் இல்லாத பரம்பொருள் ஆதலால் பரம்பொருள் எனவும்இ ஊழிக் காலத்தில் இவர் மட்டுமே*

நிலைத்திருப்பவராதலால் சதாசிவன் எனவும் அழைக்கப்படுகிறார். சிவனின் திருப்பெயரை மனதில் நாளும் உருவேற்றினால் யாவும் எளிமையாய் முடியும். இதனைத் திருமந்திரம்,

"அரகர என்ன அரியதுஒன்று இல்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப்பு அன்றே" (திரும – 916)

என்கிறது. அர என்றால் சிவன் (அரன்)இ கர என்றால் மாயா (கரன்). அரகர எனத் தியானம் செய்பவர்கள் ஒளி உடலைப் பெற்று சிவ உலகை சென்றடையும் பேறு பெற்றவர் ஆவர். அரகர என உரைத்தலால் வினை நீங்கிவிடும். வினைகளை அறுத்தலால் சிவன் அரன் ஆவான். மாயா காரியத்தை ஒடுக்குதலால் கரன் ஆவான். இதனை,

"ஐயனே அரனே என்று அரற்றினாய்
உய்ய லாம்உல கத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே
வையம் ஆனவும் வைப்பர்மாற் பேறரே" (பாடல் - 1678)

என்றும், சிவனே அரனே என உள்உருகி வேண்டினால் இறைவன் நம் பிணி போக்குவான் என்பதை,

"சித்தத்து உருகிச் சிவன்எம் பிரான்என்று
சிந்தையுள்ளே பித்து பெருகப் பிதற்று
கின் றார்பிணி தீர்த்தருளாய் (பாடல் - 2129)

என அப்பர் தேவாரத்தில் அருளியுள்ளமையும் சான்றாக அமைகிறது.

ஐந்தெழுத்தால் ஆனவன் சிவன் :

நந்தியாகிய சிவபெருமான் திருவைந்தெழுத்து வடிவமாய் விளங்குகின்றான். ஐந்தெழுத்தின் தியானத்தால் உடலில் சிவன் எழுந்தருளியுள்ளான் என்பதை உணரப் பெறலாம். ஐந்து சொற்களின் முதல் எழுத்துக்களால் ஆகியது பஞ்சாட்சரம் என்பதனை,

"அஞ்செழுத் தாலே அமர்ந்தனன் நந்தியும்
அஞ்செழுத் தாலே அமர்ந்தபஞ் சாக்கரம்
அஞ்செழுத் தாகிய அக்கர சக்கரம்
அஞ்செழுத்து உள்ளே அமர்ந்திருந் தானே"(திரும – 934)

என்கிறது திருமந்திரம். இந்த ஐந்து எழுத்துக்களாலேயே சக்கரங்கள் அமைக்கப்படுகின்றன. பஞ்சம் - ஐந்துஇ அக்கரம் - சக்கரம். அவையாவன சிறப்பு (சி), வனப்பு (வ), யாப்பு (ய), நடப்பு (ந), மறைப்பு (ம) என்பன ஆகும். இவற்றுள் நுட்பமாய் வீற்றிருந்து அருள்புரிபவன் விழுமிய சிவபெருமான். இதனை,

"அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்த ஆதிபுரானமும் அனைத்தும்
அஞ்செழுத்தே ஆனந்த தாண்டவமும் ஆறானுக்கு
அப்பாலாய் மோனந்த மாமுத்தியும்" (பாடல் - 44)

என்று திருவைந்தெழுத்தின் மகிமையை உண்மை நெறி விளக்கம் பறைசாற்றுகிறது. உயிர்கள் மனதினால் ஒன்றி மூச்சுக் காற்றோடு இணைந்து இயங்கும் மந்திரம் இத் திருவைந்தெழுத்து மந்திரம் என்கிறது திருமந்திரம். மேலும் திருவைந்தெழுத்தைப் பற்றி சிவஞான சித்தியார்,

"அஞ்செழுத்தா லான்மாவை றரனுடைய பரிசும்
அரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லிங்கசர நியாசம் பண்ணி
ஆன்மாவி னஞ்செழுத்தா லிதயச் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியி னனலை யோம்பி
அனைவரிய கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிபடியுச் சரிக்கமதி யருக்கன்
அனையரவம் போற்றோன்று மான்மாவி லரனே (பாடல் - 299)

எனப் பாடலுடன் ஒப்பீட்டு நோக்கலாம். மேலும் திருவைந்தெழுத்து மந்திரமே முதல் மந்திரம் எனபதை,

"முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதல் ஆகும் முதல்வனார் எழுத்து அஞ்சு என்பார்
அந்தியின் உள்மந்திரம் அஞ்செழுத்துமே என்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார் (பாடல் - 2169 )

என திருவைந்தெழுத்தின் சிறப்பினைப் பெரியபுராணம் பாடுகிறது.

பிரணவமும் ஐந்தெழுத்து :

பிரணவமாகிய ஓம் போன்றே திருவைந்தெழுத்து அமைந்துள்ளது. பிரணவத்தை தனிப்பட்டதாக அ, உ, ம என நோக்கினால் 'அ' கரம் உயிர்களைக் குறிக்கும். 'உ' கரம் பர(அருள்) நிலையைக் குறிக்கும். 'ம' கரம் சிவத்தைக் குறிக்கும். அதைப் போலவே திருவைந்தெழுத்தில் 'சி' என்பது சிவத்தையும் 'வ' என்பது திருவருள் நிலையையும் 'ய' என்பது உயிர்களையும் குறிக்கும். பிரணவத்திலும் திருவைந்தெழுத்திலும் சிவம் விளங்கும் முறை கூறப்படுகின்றது. இதனை,

"அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் மலமாய் வரும் முப்பதத்தில்
சிகாரம் சிவமாய் வகாரம் வடிவமாய்
யகரம் உயிர்என்று அறையலும் ஆமே" (பாடல் - 2503)

என்கிறது திருமந்திரம். 'ஓம்' எனும் பிரணவமும் 'சிவய' என்னும் ஐந்தெழுத்து மூலமும் ஒன்றென திருமந்திரம் விளக்கியுள்ளது. திருவைந்தெழுத்து மந்திரத்தை மதிப்பறிவார் மனத்துள் நின்று சிவன் காத்தருள்வான் என்பதை,

"சிகார வகார யகார முடனே
நகார மகார நடுவுற நாடி
ஒகார முடனே ஒருகா லுரைக்கு
மகார முதல்வன் மதித்துநின் றானே" (பாடல் - 982)

என்கிறது திருமந்திரம். அதாவது 'சி' கார 'வ' கார 'ய' காரம் உடனே - சிவஇ யஇ சிவயவுடன்இ நகார 'ம' கார நடுவுற நாடி - ந ம என்று ஓதும் போது இடை எழுத்தாக 'ய' இருப்பதை உணர்ந்து 'சிவாயநம' என்று: 'ஓ' காரமுடனே ஒருக்கால் உரைக்க - ஓகாரம் ஆகிய ஓம் என்னும் பிரணவத்தைச் சேர்த்து தியானிக்கஇ மகரமெய்த் தலைவனான பரம்பொருள் தன்னை இப்படி தியானிப்பவர்களின் தவத்தினை மெச்சி அவர் காண காட்சித் தருவான் என்கிறது திருமந்திரம்.

திருவைந்தெழுத்தின் வல்லமை :

இறைவன் ஒருவனே எங்குமாய் யாவுமாய் வீற்றிருப்பவன் ஆவான். அண்டம் அனைத்திலும் வியாபித்துள்ளதும் அவன் அருள் ஆகும். அண்ட சராசரங்களிலுள்ள அனைத்து உயிர்களையும் தாங்கி நிற்கும் ஆதி அந்தமில்லாத பரம்பொருளாகிய இறை சக்தியே இந்த உலகத்தில் உள்ள உயிர்களுக்குள் மூலாதாரத்தில் ;நமசிவாய' என்றும் அதைச் சுற்றியுள்ள அக்கினி மண்டலத்தில் 'நமசிவாய' என்றும் உடலைச் சுற்றியுள்ள சூரிய மண்டலத்தில் 'வாசிய' என்றும் உடலைத் தாண்டி யோக நிலையில் பெறும் கருணையான பரவெளியைச் சுற்றியுள்ள சந்திர மண்டலத்தில் 'வாசி' என்றும் மந்திரச் சொற்களாக இருக்கின்றது திருவைந்தெழுத்து மந்திரம் என்கிறது திருமந்திரம். இதனை,

"தராதல மூலைத் தற்பர மாபரன்
தராதலம் வெப்பு நமவா சியவாந்
தராதலஞ் சொல்லிற் றான்வா சியவாகுந்
தராதல யோகந் தயாவாசி யாமே" (பாடல் - 890)

என்கிறது. பிரபஞ்சத்தின் அனைத்து இடங்களிலும் நிறைந்திருக்கும் திருவைந்தெழுத்து மந்திரத்தின் தலைவன் சிவனே என்பது நாம் உணரப்பெறுகிறோம். திருமூலர் திருமந்திரத்தின் நான்காம் தந்திரத்தில் 'அசபை' அதிகாரத்தில் மந்திரம் (அசபை - உச்சரிக்கப்படாமல் மூச்சுக்காற்றோடு சேர்ந்து இயங்கும் மந்திரம்) திருவைந்தெழுத்து மந்திரம் என்று பாடி அருளியுள்ளார். இதன்மூலம் திருவைந்தெழுத்து மந்திரம் யுhவுமாய் விளங்கும் வல்லமை படைத்தது என்பது அறியப்பெறுகிறது.

திருவைந்தெழுத்தின் பேறு :

ஓம் என்னும் பிரணவத்தின் விரிவே ‘சிவாய நம’ ஆகும். ஓம் என்ற பிரணவம் மூல மந்திரம் ஆகும். அவ்வொலியிலிருந்தே அண்ட சராசரங்கள் தோன்றின். அனைத்திற்க்கும் ஆதாரமாகத் திகழ்வது திருவைந்தெழுத்து மந்திரமே. உயிர்கள் என்று துன்புற்றனவோஇ அன்றே இறைவன் உயிர்கள் துன்பத்திலிருந்து விடுபடும் சாதனமாக திருவைந்தெழுத்து மந்திரம் அருளப்பட்டது. சிவ வழிபாட்டில் திருநீறும் ருத்ராட்சமும் புறச்சாதனங்களாக விளங்க ‘நம சிவாய’ என்னும் திருவைந்தெழுத்து அகச்சாதனமாக விளங்குகிறது. திருவைந்தெழுத்து மந்திரம் சிவபெருமானின் அடியார்கள் உண்ணும் நோய் தீர்க்கும் மருந்தாகவும் கால தத்துவம் கடந்த நித்தியப் பொருளாயும்இ வேதப் பொருளாயும்இ அறியாமை நீக்கும் நூலறிவாகவும் அருளாளர்கள் பண்ணொடு பாடும் பாடலாகவும் அப்பாடலின் பொருளாகவும் விளங்கும் பேறு பெற்றதாகும். இத் திருவைந்தெழுத்து மந்திரத்தின் தலைவனானவன்,

“உண்ணும் மருந்தும் உலப்பிலி காலமும்
பண்ணுறு கேள்வியும் பாடலு மாய்நிற்கும்
விண்ணின்று அமரர் விரும்பி அடிதொழ
எண்ணின்று எழுத்து அஞ்சுமாகி நின்றானே” (பாடல் - 968)

என்கிறது திருமந்திரம். வானில் உள்ள தேவர்கள் அவன் திருவடி தொழவும் ஆராயுமிடத்துத் திருவைந்தெழுத்து வடிவமான நமசிவாய வடிவமாகவும் இருப்பான். திருவைந்தெழுத்து மந்திரம் ஓதுபவர்களுக்கு ‘அபாயம் ஒன்றும் இல்லை’ என்பது மெய் கூற்றாகும். மேலும் திருவைந்தெழுத்தே நாம் அடைய வேண்டிய மெய்பொருளாகும். இதனை கீழ்வரும் இலக்கியங்கள் மூலமும் நாம் அறியப் பெறலாம்.

“வேதம் நான்கினும் மெய்பொருளாவது
நாதன் நாமம் நமசிவாயவே” (பாடல் - 01)

என தேவாரம் மூன்றாம் பதிகத்தில் திருஞானசம்பந்தரும்,

“நற்றவா உனைநான் மறக்கினும்
சொல்லும் நா நமசிவாயவே” (பதிகம் - 7.48இபா - 01)

என சுந்தரர் தேவாரத்திலும் அருளியுள்ளனர். மேலும் மாணிக்கவாசகப் பெருமானும் ‘நமசிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க’ என்றே தனது சிவபுரானத்தைத் தொடங்கியுள்ளதை நாம் அறிவோம். திருவைந்தெழுத்து மந்திரம் சொல்லி வந்தால் உள்ளத்துள்ளே பரம்பொருள் இடம்கொள்ளும். அதுமட்டுமல்லாது அற்புதமும் செய்யவல்லது என்பதை,

“செம்பொன் ஆகுஞ் சிவாய நமவெனிற்” (பாடல் - 903)

என்றும்,

“வாறே சிவாய நமச் சிவாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை” (பாடல் - 905)

என்றும், தான் ஒன்றி வாழும் இடமானது இத் திருவைந்தெழுத்து மந்திரம் என்பதனை,

“தானொன்றி வாழிடந் தன்னெழுத்தே ஆகும்
தானொன்று மந்நான்குந் தன்பே ரெழுத்தாகும்
தானொன்று நாற்கோணந் தன் ஐந்தெழுத்தாகும்
தானொன்றி லேயொன்று அவ்வரன் தானே” (பாடல் - 915)

என்று திருமந்திரம் விளக்குகிறது. மனம் பொருந்தி திருவைந்தெழுத்து மந்திரத்தில் இலயித்தால் கிடைப்பதற்க்கு அரிய பேறு நிச்சயம் கிட்டும். திருவைந்தெழுத்து என்னும் அருமந்திரம் ஓதினால் எவ்வித உடற்டபிணியும் மனநோயும் நம்மை அண்டாது என சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார். உறக்கத்திலும் உறக்கமில்லா நிலையிலும் ‘நமசிவாய’ என்னும் திருவைந்தெழுத்து மந்திரத்தினை நெஞ்சுருக தினமும் வழிபடுவோர் கண்டு எமனும் அஞ்சுவான்இ ஐந்தெழுத்து மந்திரம் எமனையே அஞ்சுமளவிற்க்கு உதைத்துவிடும் என்கிறார் சம்பந்தர். இவ்வாறாக திருவைந்தெழுத்தின் சிறப்புகளையும் அதனை ஓதுவதால் உண்டாகும் பேறு பற்றியும் நம் சமயப்பெரியோர்கள் எடுத்தோதியுள்ளனர்.

மேலும் திருமந்திரத்தில் திருவைந்தெழுத்தின் அனைத்து அம்சங்களையும் திருமூலர் அருளியுள்ளமையும் நாம் அறியப் பெறுகிறோம். இம் மந்திரத்தை சிவபெருமான் அம்மைக்கு உபதேசிக்க அம்மை நந்திக்கு உபதேசிக்க நந்தி திருமூலருக்கு உபதேசித்துள்ளார் எனத் திருமந்திரம் கூறுகிறது. (திரும – 92)

முடிவுரை :

எல்லாம் வல்ல இறைவன் நமக்குள் தான் இருக்கிறார். எண்ண சுத்தத்தில் தான் இறைத்தன்மை நிறைந்திருக்கிறது. பஞ்ச பூதங்களும் திருவைந்தெழுத்து மந்திரத்தின் உள் அடக்கம். அண்டம் முழுவதும் பஞ்ச பூதத் தத்துவம் நிறைந்திருக்கிறது. அண்டத்திலுள்ளது பிண்டத்திலும் உள்ளது. திருவைந்தெழுத்து மந்திரம் பிறவிப்பிணி தீர்க்கும் அருமருந்து. திருவைந்தெழுத்து மந்திரம் புனிதத்திலும் புனிதமானது. நம் ஜனனஇ மரணத்தை அறுக்கவல்லது. இன்றைய அவசர உலகில் நம் மனதில் பல குப்பைகளைத் தேக்கிக் கொண்டு இறந்தகாலத்திலேயே தொலைந்துக் கொண்டிருக்கிறோம். அவற்றை விடுத்து கசடுகளை நீக்கி திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதுவோம். நிகழ்பவை அனைத்தும் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து ‘சிவாயநம’ என செபித்து நிகழ்காலத்தின் நிதர்சனம் அறிய முற்படுவோமாக.

“ ஓம் நமசிவாயஇ ஓம் சிவாயநம”….

மேற்கோள்கள் :


1. ஞா. மாணிக்கவாசகன், திருமூலர் திருமந்திரம், உமா பதிப்பகம், சென்னை – 2004.
2. தி.க சாமிநாதன், திருமந்திரம் மூவாயிரத்தில் முந்நூறு, இம்பீரியல் அச்சகம், சென்னை – 2009.
3. வே. சங்கர், உயிர்ப்பயணம், நர்மதா பதிப்பகம், சென்னை -2005.
4. அருணந்தி சிவாச்சாரியார், சிவஞான சித்தியார், சைவ சித்தாந்த பெருமன்றம், சென்னை – 1994
5. உமாபதி சிவாச்சாரியார், உண்மை நெறி விளக்கம், சைவ சித்தாந்த பெருமன்றம், சென்னை – 1994
6. சுந்தரர் தேவாரம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1978.
7. சேக்கிழார் பெரியபுராணம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம், சென்னை – 1993.
8. ஞானசம்பந்தர் தேவாரம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1961.
9. திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1976.
10. திருவாசகம், திருப்பனந்தாள் காசிமடம் வெளியீடு, 1957.
11. கோவி இலக்குமனன், ஆண்டாள் இலக்குமணன், திருமந்திர மாலை, சென்னை.


********* ********* ********** ********* ********* ********** ********** **********